2020–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு கொமாரபாளையம் நகராட்சி சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

முன்னிலை:– திரு.சி.ஸ்டான்லி பாபு, இ.கலை., அவர்கள்.
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்

பொருள் எண்.1

ஆணையாளர் அவர்களின் ஜனவரி – 2020 மற்றும் பிப்ரவரி – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண்.59 நாள்.28.2.2020
பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண்.2

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி – 2020 மற்றும் பிப்ரவரி – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண்.60 நாள்.28.2.2020
பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண்.3

இந்நகராட்சி பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் உயர் அழுத்த மற்றும் தாழ்வழுத்த புதைவட மின் பாதை அமைப்பதற்கு நகராட்சி மூலம் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் அதற்கான சாலை பராமரிப்பு கட்டணம் செலுத்தியுள்ளார்கள். தற்போது HT / LT புதைவடம் அமைக்கப்பட்டுள்ள சாலைகளில் பொது மக்கள் இலகு ரக வாகனம் மற்றும் கன ரக வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இரண்டாம் கட்டமாக தார் சாலைகள் மற்றும் கான்கிரீட் சாலைகள் பகுதியில் முழுமையாக புதைவடம் முடிக்கப்பட்ட சாலைகளை சீரமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.25,00,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.61 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

இந்நகராட்சி அலுவலகம் கட்டி 10 வருடங்களுக்கு மேல் ஆகிறது. ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறைகள் தற்போது நவீன காலத்திற்கு ஏற்றார்போல் வசதிகள் எதுவும் இல்லை. தற்போது நவீன முறையில் இரு அறைகள் மாற்ற இரு அறைகளுக்கும் புதியதாக False ceiling, Side wall

panelling, பின்புறம் Storage rack, புதிய Door பொருத்துதல் மற்றும் பொறியியல் பிரிவுக்கு இளநிலை பொறியாளர், பணிமேற்பார்வையாளர், படவரைவாளர், இளநிலை உதவியாளர், பொருத்துனர் மற்றும் மின்கம்பியாளர் ஆகியோருக்கு பழைய பழுதடைந்த டேபிள்களாக உள்ளதால் பணிகள் செய்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, நவீன காலத்திற்கு ஏற்ப புதிய கேபின்கள், டேபிள்கள், Storage rack, False ceiling மற்றும் இதர பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அலுவலகப் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.17,40,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.17,40,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.62 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

இந்நகராட்சி அலுவலகம் கட்டி 10 வருடங்களுக்கு மேல் ஆகிறது. பொதுப் பிரிவுக்கு மேலாளர், கணக்கர், உதவி திட்ட அமைப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர்கள் ஆகியோருக்கு பழைய பழுதடைந்த டேபிள்களாக உள்ளதால் பணிகள் செய்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, நவீன காலத்திற்கு ஏற்ப புதிய கேபின்கள், டேபிள்கள், Storage rack, False ceiling மற்றும் இதர பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அலுவலகப் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.15,40,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.15,40,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.63 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 திருவள்ளுவர் நகர் 1வது வீதி (ஜே.கே.கே.நடராஜா கல்வி நிலையம் பின்புறம்) முதல் வாசுகி நகர் வரை செல்லும் வடிகால் மற்றும் திருவள்ளுவர் நகர் குறுக்கு வீதியில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து கழிவுநீர் செல்வதற்கு இடையூறாக உள்ளதால், கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே, மேற்சொன்ன பகுதியில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலினை இடித்துவிட்டு புதியதாக மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலம் கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,30,000/–க்கு கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.9,30,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.64 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண்.18 நேதாஜிநகர் மற்றும் அன்னைநகரில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 18 எண்ணிக்கையில் புதிய LED மின் விளக்குகள் அமைக்க விண்ணப்பிக்கப்பட்டதில் கேட்பு தொகை ரூ.42,557/- ஐ செலுத்த வேண்டும் என உதவிபொறியாளர் இயக்கம் மற்றும் பராமரிப்பு தமிழ்நாடு மின் உற்பத்திமற்றும் பகிர்மான கழகம், குப்பாண்டம்பாளையம் பிரிவு கொமாரபாளையம் என்பவரின் கேட்பு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை செலுத்த ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு :

1. அனுமதிவழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை ரூ.42557/- ஐ செலுத்தியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.65 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.3 இல் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி சின்னப்பநாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள பள்ளிகளுக்கு ஏற்கனவே மின் இணைப்பு உள்ளது. இதில் உயர்நிலைப்பள்ளிக்கு என தனியே மும்முனை மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட மின் இணைப்பிற்கான கேட்பு கட்டணத்தொகை ரூ.9968/- செலுத்த வேண்டும் என இந்நிலை பொறியாளர் இயக்கம் மற்றும் பராமரிப்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சி.என்.பாளையம் பிரிவு யகொமாரபாளையம் என்பவர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்த ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதிவழங்கலாம்.
2. மே.ற்கண்ட பள்ளிக்கு மின் இணைப்பு குறித்து பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று மும்முனை மின் இணைப்பிற்கான தொகை ரூ.9968/- ஐ செலுத்தியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கிமைக்கும் அனுமதிவழங்கலாம்.

தீர்மானம் எண்.66 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 18.02.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

வ. எ ண்	வேலையின் பெயர்	மதிப் பீட்டுத் தொகை ரூ.	ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம்	மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல்
	பொது நிதிப் பணிகள்			
1.	வார்டு எண்.11 நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் பழுதடைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தினை இடித்துவிட்டு புதிய கழிப்பிடம் கட்டும் பணி.	24,30,000/–	திரு.பி.சின்னண்ணன் திரு.சி.லோகநாதன்	மதிப்பீட்டுத் தொகையினைவிட 0.19 % குறைவு. மதிப்பீட்டுத்

				தொகையினைவிட **0.82** % அதிகம்.

அலுவலகக் குறிப்பு

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட **0.19** சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.பி.சின்னண்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.**11** நாள்.**31.01.2020** ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.67 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய **26.02.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

வ. எ ண்	வேலையின் பெயர்	மதிப் பீட்டுத் தொகை ரூ.	ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம்	மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல்
	பொது நிதிப் பணிகள்			
1.	கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான 36 எண்ணிக்கை பேட்டரியில் இயங்கும் (BOV) வாகனங்களை வருடாந்திர முறையில் (AMC) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.	11,50,000/–	திருவாளர்கள். பிரியம் இன்டஸ்டீரிஸ் இன்ஜினியரிங் (பி) லிட்., தாராபுரம். திருவாளர்கள். அருண் இன்டியன் மோட்டார்ஸ், சேலம்.	மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.19** % குறைவு. மதிப்பீட்டுத் தொகையினைவிட **20.00** % அதிகம்.

அலுவலகக் குறிப்பு

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட **0.19** சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். பிரியம் இன்டஸ்டீரிஸ் இன்ஜினியரிங் (பி) லிட்., தாராபுரம் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.20 நாள்.**31.01.2020** ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.68 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.11

இந்நகராட்சி பகுதிகளில் வருடந்தோறும் மாசிப்பண்டிகை 33 வார்டுகளிலும் காளியம்மன், மாரியம்மன் கோவில் பண்டிகை கொண்டாடுவதால் பொதுமக்கள் அனைத்து பகுதிகளிலும் உள்ள கோவில்களிலும் அதிகமாக கூடுவதாலும் மற்றும் நகரின் பிரதான பகுதிகளான பேருந்துநிலையம் மார்க்கெட் போன்ற பகுதிகளில் மக்கள் கூடுவதாலும் பொதுமக்களின் சுகாதார நலநன கருத்தில் கொண்டு தொற்றுநோய்கள் பரவாமல் இருக்க கிருமிநாசினியாக பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்பு, மற்றும் பிளிச்சிங் பவுடர் தெளிக்க தேவைப்படுவதால், நீர்த்த சுண்ணாம்பு 2000 kg மற்றும் பிளிச்சிங்

பவுடர் 600 kg கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.25000/- க்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் கூட்டப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. கூட்டப் பொருள்அனுமதிக்கலாம்.
2. மேற்படி கிருமி நாசினி உள்ளூர் விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்யவும், மேற்படி செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.69 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான நகல் எடுக்கும் இயந்திரத்தில் உதிரிபாகங்கள் தேய்ந்து பழுதாகி வருகிறது. இதன் காரணமாக அலுவலக கோப்புகள் மற்றும் கடிதங்கள் நகல் எடுத்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களுக்கு உடனடியாக அனுப்ப இயலாத நிலை உள்ளது. மேலும் இதனால் உதிரிபாகங்கள் புதியது வாங்கி பொருத்த கூடுதல் செலவாகிறது. எனவே மேற்கண்ட இயந்திரத்திற்கு AMC அமைத்து நகல் எடுக்கும் இயந்திரத்தினை பராமரிக்க 16.3.2020 முதல் 15.3.2021 வரை ஓராண்டிற்குவிட ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.22,000/- க்கு தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள உள்ளூர் நிறுவனத்தாரிடமிருந்து விலைப்புள்ளி பெற்று மேற்கொண்ட பணியினை மேற்கொண்டமைக்கும், அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதிவழங்கலாம்.

தீர்மானம் எண்.70 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான நகல் எடுக்கும் இயந்திரத்தின் பாதுகாப்பு குறித்து AMC பணியினை மேற்கொள்ள 2020 ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விலைவிபரத்தை தனிஅலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

வ.எண்.	நிறுவனத்தின் பெயர்	தொகை ரூ (+) GST
(i)	M/s Gsc Technology Services 39D R.P. Complex Pallipallayam Road Komarapalaym–638183	18000 + (18% GST)
(ii)	M/s Interfaces Technologies No.7Saravanabhavan Complex First Floor Meettu Street Salem – 636001	23805 + (18% GST)
(iii)	M/s Perennial Systems 2/15Vinayagarkoil Street Swernapuri Salem – 636004	20700 + (18%GST)

அலுவலக குறிப்பு :

மேற்படிவரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 இல் கண்டுள்ள M/s GSC Tecnnology Services Komarapalayam என்பவரின் விலைவிபரமானது மற்ற நிறுவனத்தாரின் விலைவிபரத்தைவிட மிககுறைவாக இருப்பதால் மேற்படியாரின் விலைவிபரத்தை ஏற்று மேற்கண்டபணியின் அவசர அவசியம் கருதிதனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை உடனடியாக மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கிமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கிமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.71 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 சில்வர்டோன் வீதி, வார்டு எண்.4 மேல்நிலைப்பள்ளி சாலை, வார்டு எண்.6 காமாட்சியம்மன் கோவில் வீதி, வார்டு எண்.18 ஆலாங்காடு ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு அதில் 3.00 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் இறக்கப்பட்டும், வார்டு எண்.7 சத்தியாபுரியில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு அதில் 2.00 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் இறக்கப்பட்டு அருகிலேயே மோட்டார் அறையுடன் கூடிய தண்ணீர் தொட்டி வைத்து குடிநீரல்லாத தேவைக்காக அப்பகுதி மக்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்குறிப்பிட்ட ஐந்து மோட்டார்களும் ஆழ்துளை கிணற்றில் இறக்கப்பட்டு சுமார் 6 வருடங்களுக்கு மேலாகின்றது. மேலும், இந்த மோட்டார்களின் தொடர்ச்சியான இயக்கம் காரணமாக பழுதடைந்து தண்ணீர் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றுவது தடைபட்டுள்ளது. இதன்காரணமாக மேற்ச்சொன்ன ஐந்து மோட்டார்களையும் மேலே ஏற்றி பரிசோதித்த பொழுது ஐந்து மோட்டார்களின் பம்புகள் மீண்டும் பழுது சரி செய்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் குடிநீரல்லாத தண்ணீர் இல்லாமல் பெரும் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே, புதியதாக நான்கு எண்ணிக்கை 3.00 எச்.பி. நீர்மூழ்கி மின்மோட்டார்களும், ஒரு எண்ணிக்கை 2.00 எச்.பி. நீர்மூழ்கி மின் மோட்டாரும் கொள்முதல் செய்து மீண்டும் அப்பகுதிக்கு தண்ணீர் விநியோகம் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3,85,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3,85,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.72 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.15

இந்நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் மொத்தமாக 153 மின் விசை பம்புகள் இயங்கி வருகின்றன. இந்நகரில் உள்ள கழிப்பிட கட்டிடங்களுக்கு தண்ணீர் வசதி செய்யவும் நகர மக்களின் குடிநீர் அல்லாத தேவைகளை பூர்த்தி செய்யவும் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நகரில் வசிப்பவர்களின் பெரும்பாலானோர் கூலி தொழில் புரியும் ஏழைகள் ஆவார்கள்.

மேலும், தற்போது பயன்பாட்டில் உள்ள பல மின் மோட்டார்கள் ஆழ்துளை கிணற்றில் இறக்கி பயன்பாட்டிற்கு கொண்டு வந்து பல வருடங்கள் ஆகிவிட்டபடியால், அடிக்கடி பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகம் தடை படுகிறது. பழுது ஏற்படும் ஒவ்வொரு முறையும் ஆழ்துளை கிணற்றில் இருந்து மோட்டாரை மேலே ஏற்றி பழுது சரி செய்து மீண்டும் இயக்குவதற்கு நான்கு நாட்களுக்கு மேல் ஆவதால் பொது மக்கள் தண்ணீர் இன்றி மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். ஒரு மோட்டாரில் மூன்று முறைக்கு மேல் காயில் கட்டி பழுது சரி செய்யும் பொழுது அதன் விசை குறைந்து நீர் உரிஞ்சும் தன்மையும் குறைந்து விடுகிறது. மேலும், தற்போது கோடைகாலம் துவங்கி விட்ட நிலையில் தண்ணீரின் தேவை அதிகளவில் உள்ளதால் மோட்டார்களின் பயன்பாடு அதிகமாகிறது. இதனால், மோட்டார்களில் அடிக்கடி பழுது மற்றும் உந்து சக்தி குறைந்து மோட்டாரினை இயக்க முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, பழுது சரி செய்ய இயலாத மின் மோட்டார்களுக்கு பதிலாக புதிதாக நீர்முழ்கி மின்மோட்டார்கள் வாங்கி இருப்பில் வைத்துக் கொண்டு பழுது ஏற்படும் பொழுது மாற்று ஏற்பாடாக

உபயோகிக்கும் வகையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4,80,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.4,80,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.73 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 அம்மன் நகர் பிரதான சாலையில் 300mm A.C. குழாய் மூலம் சுந்தரம் காலனியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து நாராயண நகர் அம்மன் நகர் குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், புதிய எல்லை மாரியம்மன் கோவில் வீதி முதல் மணல் ஆபிஸ் பிரிவு சாலை வரை உள்ள A.C. குழாய்கள் கனரக போக்குவரத்தின் காரணமாக மிகவும் பழுதடைந்து அதிக நீர் கசிவு ஏற்பட்டு தண்ணீர் வீணாகிறது. இதன் காரணமாக அப்பகுதி பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லை. மேலும், நீர் கசிவு காரணமாக சாலையில் தண்ணீர் வழிந்தோடியும், சாலையில் தேங்கியும் உள்ளதால் சுகாதார கேடு விளைவிக்கும் அபாயமும் சாலை சேதமடையும் சூழ்நிலையும் உள்ளது. எனவே, சேதமடைந்துள்ள A.C. குழாய்களை அகற்றிவிட்டு புதியதாக 300mm D.I. குழாய்கள் வாங்கி பொருத்தி மீண்டும் குடிநீர் விநியோகத்தினை சீர் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,25,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3,25,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.74 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.17

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 அன்னை நகர் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க பகிர்மானக் குழாய்கள் இல்லாத காரணத்தினால் அப்பகுதி மக்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க முடியாத நிலை உள்ளது. எனவே, மேற்சொன்ன பகுதியில் குடிநீர் இணைப்பு வழங்க புதியதாக 90mm PVC பகிர்மானக் குழாய் அமைத்து தண்ணீர் வசதி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,90,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,90,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.75 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.18

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 பாறையூர் கிழக்கு பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு செல்ல சாலை வசதி இல்லாததால் பாறை மேல் ஏரி செல்கிறார்கள். பொது மக்கள் இதனால் மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு தமிழக மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சாலை அமைக்க அறிவுறுத்தியதின்படி மேற்படி பகுதிக்கு பொறியாளருடன் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. இப்பகுதியில் சாலை வசதி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6,00,000/–க்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.76 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.19

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் அனைத்து வார்டுகளிலும் அம்மன் கோவில் பண்டிகை கொண்டாட இருப்பதால் கிருமி நாசினியாக பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் 27.02.2020 அன்று வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

வ.எண்	நிறுவனம்	நீர்த்த சுண்ணாம்புஒரு கிலோவிலை (ரூ)	பிளீச்சிங் பவுடர் ஒரு கிலோவிலை (ரூ)
1	திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிட் SL (SPL) 170, No.87, வேலூர் மெயின் ரோடு, திருச்செங்கோடு.	ரூ. 9.50/-	ரூ. 40.00/-
2	சேந்தமங்கலம் வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிட் SL (SPL) 157, பேரூந்து நிலையம் அருகில், காளப்பநாயக்கன்பட்டி.	ரூ. 10.00/-	ரூ. 46.00/-

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருச்செங்கோடு ஆக்ரோ நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி சப்ளை பெற்றமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.77 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.20

71 வதுகுடியரசு தினவிழாவை முன்னிட்டு அழைப்பிதழ் அச்சடிக்கு பணியை மேற்கொள்ள 27.01.2020 ஆம் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் கீழ்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தை தனிஅலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

வ.எண்.	நிறுவனத்தின் பெயர்	எண்ணிக்கை	தொகை (ரூ) .
(i)	SrimathiAchagam 11 C, New Bus Stand east Garo Opp. Vittlapuri1 st Street Komarapalayam	150	2700.00
(ii)	Raja Colour Press 55/2, Narayana Nagar Komarapayam	150	3000.00

அலுவலக குறிப்பு :

மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1 இல் உள்ள M/s. Srimathi Achagam Komarapalayam என்பவரின் விபரமானது மற்ற நிறுவனத்தாரின் விலையைவிட குறைவாக இருப்பதால் மேற்படியாரின் விலைவிபரத்தை ஏற்று பணியின் அவசரஅவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதிவழங்கலாம்.

தீர்மானம் எண்.78 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.21

கொமாரபாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்ததை சரிசெய்யும் பணியை மேற்கொள்ள 21.2.2020 ஆம் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் கீழ்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தை தனிஅலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

வ.எண்.	நிறுவனத்தின் பெயர்	தொகை ரூ.
(i)	M/s V - TECH SOLUTIONS 226, SKC Road Surampatti Four Road Erode –638001	23,128
(ii)	M/s Aqua force Ro System 67, Market line (Jinna Street Back Side) Erode – 638001.	26,786/-
(iii)	M/s Saravana Agencies No.14, Gowri Theatre Opp Nehru Street Komarapalayam – 638183	26432

அலுவலக குறிப்பு :

மேற்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து வரப்பெற்ற விலைப் புள்ளிகளில் வரிசை எண்.1 இல் உள்ள M/s V–TECH–SOLUTIONS Erode என்ற நிறுவனத்தாரின் விலைவிபரமானது மற்ற நிறுவனத்தாரின் விலை விபரத்தைவிட மிககுறைவாக உள்ளதால் மேற்படியாரின் விலைவிபரத்தை ஏற்று பணிஉத்திரவு வழங்கவும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து வழங்கவும் அனுமதிவழங்கலாம்.

தீர்மானம் எண்.79 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.22

கொமாரபாளையம் நகராட்சி அலுவலகத்தில் 250 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட இயந்திரம் நீண்ட நாள் உபயோகத்தில் காரணமாக பழுதடைந்து குடிநீர் சுத்திகரிப்பு தடை செய்யப்பட்டது. இதன் காரணமாக அலுவலக பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் குடிநீர் இன்றி சிரமத்திற்குள்ளாகினர். பழுதினை சரி செய்து மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆகும் உத்தேசசெலவினம் ரூ.25000/- க்கு தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணியை உடனடியாக மேற்கொள்ள உள்ளூர் நிறுவனத்தாரிடமிருந்து விலைப்புள்ளி பெற்று மேற்கண்ட

பணியை மேற்கொண்டமைக்கும், அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதிவழங்கலாம்.

தீர்மானம் எண்.80 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.23

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN 34 D 6226 வாகனத்திற்கு சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை சரிசெய்து தருமாறு இந்நகராட்சி ஓட்டுநர் குறிப்பினில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேசசெலவினம் தொகை ரூ.52,000/- க்கு தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட வாகனத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து வாகனத்தின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டி இருப்பதால், மேற்படி வாகனத்தை உள்ளூர் நிறுவனத்தாரிடம் விட்டு விலைப்புள்ளி பெற்று பணியை மேற்கொண்டமைக்கும், அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதிவழங்கலாம்.

தீர்மானம் எண்.81 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.24

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 21.02.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

வ. எ ண்	வேலையின் பெயர்	மதிப் பீட்டுத் தொகை ரூ.	ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம்	மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல்
	பொது நிதிப் பணிகள்			
1.	வார்டு எண்.26 ஜே.கே.கே. சாலையில் உள்ள நிலவரித் திட்ட அலுவலகத்தின் அலுவலர் அறைக்கு அலுமினிய கேபின் அமைக்கும் பணி.	1,10,000/–	திரு. சி.லோகநாதன் திரு.பி.சின்னண்ணன்	மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.03** % குறைவு. மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.17** % அதிகம்.

அலுவலகக் குறிப்பு

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.03 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு. சி.லோகநாதன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.12 நாள்.31.01.2020 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.82 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.25

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்கள் ஆன் சைட் கம்போஸ்ட்க்கு நகராட்சியின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இரண்டு இடங்களில் அமைக்கவும் மற்றும் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்கள் நிறுத்த அரசு மருத்துவமனை அருகில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகத்தில் ஷெட் அமைத்து பேட்டரி வாகனங்களுக்கு சார்ஜ் செய்ய வழிவகை செய்யவும் அறிவுறுத்தியுள்ளார்கள். இதன்படி மேற்கண்ட பணிகளுக்கு பொறியாளர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டு இப்பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.8,35,000/–க்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.8,35,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.83 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.26

இந்நகராட்சியின் அலுவலகத்தில் ஆன்லைன், பொறியியல் அறைகள், பொறியியல் பிரிவு அறை, பொதுப் பிரிவு அறைகள் மற்றும் வரி வசூல் மையம் ஆகியவை நவீன மயமாக்கப்படவுள்ளது. தற்போது அனைத்து அறைகளுக்கும் மேல் பகுதி False ceiling புதியதாக அமைக்கப்படவுள்ளது. ஏற்கனவே உள்ள பழைய ஒயரிங் பழுதடைந்துள்ளதால், பழுதான ஒயர்களை மாற்றி புதிய ஒயரிங் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புதிய லைட் பிட்டிங் பொருத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், பழுதான A.C.க்கு மாற்றாக புதிய A.C. பொருத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிகள் அனைத்தும் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,95,000/–க்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.9,95,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.84 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.27

இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் மகளீர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பெட்டிக்கடை அமைத்து கொடுக்க ஆணையாளர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். இதன்படி நகராட்சி அலுவலக வளாகத்தில் கிழக்கு பகுதியில் முன்புறம் புதியதாக இரும்பினால் ஆன பெட்டிக்கடை செய்து வைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,40,000/–க்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.1,40,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.85 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.28

இந்நகராட்சியின் அலுவலகத்தில் ஆணையாளர் அறை, பொறியாளர் அறை, பொறியியல் பிரிவு அறை, பொதுப் பிரிவு அறை மற்றும் வரி வசூல் மையம் ஆகியவைகள் தற்போது நவீன காலத்திற்கு ஏற்ப தனித்தனி கம்பார்ட்மெண்ட் பிரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட உள்ளது. ஒவ்வொரு கேபினுக்கும் ஆன்லைன் ஒயரிங் ஏற்கனவே உள்ளது மிகவும் பழுதடைந்துள்ளது. இதனை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது ஒவ்வொரு கேபினுக்கு புதியதாக ஆன்லைன் ஒயரிங் பணிகள் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட அறைகளுக்கு ஆன்லைன் ஒயரிங் வசதி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.6,30,000/–க்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.6,30,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.86 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.29

அரசாணை (நிலை) எண்.77 பள்ளிக் கல்வி – (ப.க.(1)த் துறை நாள். 13.04.15 அரசாணை (MS) எண்.166 ந.நி.ம.கு (M.A.W.S) துறை நாள்.23.11.2016ன்படியும் மாவட்ட ஆட்சியர் நாமக்கல் அவர்களின் நே.மு.கடிதம் நாள்.29.11.2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/ஜே2/2016-1, நாள்.07.12.2016ன்படியும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் கழிப்பறைகளை சுத்தம் செய்யவும், பள்ளி வளாகத்தை கூட்டி, புல் செடிகளை அகற்றவும் வகுப்பறைகளை வாரம் ஒரு முறை கழுவி சுத்தம் செய்யவும் ஒப்பந்த பணியாளர்களை நகராட்சியின் மூலம் நியமனம் செய்து கொள்ளவும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பள்ளிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 முடிய (விடுமுறை நாட்கள் தவிர்த்து) கழிப்பறைகளை சுத்தம் செய்யவும் பள்ளி வளாகத்தை கூட்டி, புல் செடிகளை செதுக்கியும், வகுப்பறைகளை வாரம் ஒரு முறை கழுவி சுத்தம் செய்யவும் அதற்கு தேவையான ஒப்பந்தப்பணியாளர்களாக 19 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 1 மேற்பார்வையாளர் ஆகியோரை நாமக்கல் மாவட்ட 16.07.2019ம் தேதிய அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் நியமனம் செய்து கொள்ளவும், துப்புரவு பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வாங்கிக் கொள்ளவும், ஒப்பந்த பணியாளர்களுக்கு உரிய ESI, EPF மற்றும் நிர்வாக செலவினம் மற்றும் விளம்பர செலவினம் ஆகியவற்றிற்கு தோராயமாக ஆகும் செலவினம் ரூ.3050000/-ஐ நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.87 நாள்.28.2.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.30

இந்நகராட்சி பொது துகாதாரப் பிரிவில் 144 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பணியாளர்கள் தங்கள் அன்றாட பொது சுகாதார பணிகளில் ஈடுபடும்போது தகுந்த பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்ந் கொண்டு மட்டுமே பணிபுரிய வேண்டும் என நகராட்சி

